உ
சிவமயம்



அமரர்
உயர் திரு ஆறுமுகம் சாம்பசிவம்
அவர்களின் ஞாபகார்த்தமாக வெளியிடப்பட்ட

# சிவதீபம்

18.11.2002

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# "சிவதீபம்"

"அன்பின் வழியது உயிர்நிலை - அஃதிலார்க்கு
என்பு தோல் போர்த்த - உடம்பு"

# சமர்ப்பணம்

என் அன்புத் தெய்வமே! கண்ணிறைந்த
கணவரே! என்னெண்ணமெல்லாம் நிறைவாக்கி
என்னிதயத்தில் அணையாத சுடரேற்றி
வையத்தில் வாழ்வாங்கு வாழவைத்துவிட்டு
வைகுந்தம் வாழச் சென்றுவிட்டீர்கள்
அன்பால் அறிவால் பண்பால் பாசக்கடலில்
நீந்த விட்டீர், இமயச்சிகரம் வரை - வாழ்வில்
எங்கள் இதயங்களைக் கருங்கல்லாக்கி
என்றுமே அழியாத ஒளிபரப்பி சொல்லாமல்
நில்லாமல் நிமலன் அடிநிழல் சென்ற தந்தையே
முல்லை இளமுறுவல் முகம் நோக்காப்பண்பு
எல்லையில்லாப்பாசம் எல்லாம் இழந்தோம்
கன்றை இழந்த கறவைகளாய் கதறுகிறோம்
குன்றிலிட்ட தீபமென என்றுமிதயத்தில் ஏற்றினோம் மாமா!
சுடர் கொஞ்சும் குரலில் யதா, பிரார்த்தன், கவின், நிதன்
என்றழைத்து கொடுத்து மகிழ்வீர்கள் இனிப்புவகை
கஜானனி, யாழினி, பிரணவன் சுகம் கேட்டீர்
காண விரைவில் நேரில் வருவேன் என்று
கடிதத்தில் எழுதி வான்வழி சேர்த்தீர்கள்
தாத்தா! பாசமடல் வந்த பத்தாம் நாளில்
தொலை நகலில் வானகம் சென்ற செய்திகேட்டு
துடித்தோம் துவண்டோம் துயரக்கடலில் மூழ்கி
எழுந்தோம், இதயங்களில் அணையாத
சுடர் ஏற்றிவிட்டோம் அம்மப்பா! அப்பப்பா!
சிவதீப சிறுமலரை திருப்பாதம் வைத்தோம்!
அஞ்சலித்தோம்!!

*அன்னை, பிள்ளைகள், மருமக்கள்,*
*பேரக்குழந்தைகள்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*" எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் - உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"*

## நன்றி நவிலல்

தெய்வத்திருமகனாய் சீரொலிய வந்து
அன்பினால் எம்மை ஆளாக்கி அரவணைத்து
நல்ல நிலைப்படுத்தி நானிலமும் போற்ற
வழமாக்கி வாழ எமை வைத்துவிட்டு
சொல்லாமல் எம் நெஞ்சங்களில் சுடர்ஏற்றி
எல்லாம் வல்ல எம்பெருமான் திருவடிக்கீழ்
இணைந்த எமது அன்பு தலைவன், தந்தை
மாமன், பேரன் அவர்களின் இறுதியாத்திரை
அதனை ஒட்டிய கிரியைகள் மற்றும்
அந்தியேட்டி, சபிண்டீகரணம் என்பவற்றில்
பங்கு கொண்டு அன்பைச் சொரிந்தும்
அனுதாபம் நல்கியும் ஆத்மாசாந்தி அஞ்சலிகள்
செய்தும் வேறு பலவகையாக உதவினோர்
அனைவர்க்கும், கிரியைகளை வேதாசார
விதிமுறையாகச் செய்துதவிய சிவஸ்ரீ கணேச
பூரணக் குருக்கள் அவர்கட்கும், அவருடன்
இணைந்து செயற்பட்ட அந்தணப் பெரியார்கட்கும்
"சிவதீபம்" காணிக்கை மலரைத் திறம்பட வெளியிட்டு
உதவிய கலைவாணி அச்சுக்கலையகத்தாருக்கும் மனம்
குழைந்து சிரம் தாழ்த்தி நன்றி செலுத்துகிறோம்.

"நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும்"

***மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"



வையத்தில்
05.12.1935

வைகுந்தத்தில்
09.10.2002

அமரர்

# உயர்திரு ஆறுமுகம் சாம்பசிவம் அவர்கள்

## திதி நிர்ணயம்

சீரோங்கு சித்திரபானு புரட்டாதி புதன் இருபத்து மூன்றில்
பாரோங்கு பூர்வபக்கத் திருதியை திதியில் - செம்மல்
ஏரோங்கு விவசாயப் பெருமகன் ஆறுமுகம் சாம்பசிவம்
நேரோங்கு சென்றார் நிமலன் திருவடிக்கீழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் சுவடு

## வைகுந்த வாசி ஆறுமுகம் சாம்பசிவம்

சப்த தீவுகளில் வரலாற்றுப் புகழ் கொண்ட நீண்ட தீவுதான் நெடுந்தீவு. ஆஞ்சநேயர் மூலிகை மலையைக் கொண்டு வரும்போது அவர் வேகத்தில் விழுந்த துண்டங்களில் ஒன்றெனச் செவிவழிக் கதையுமுண்டு. கடல் மட்டத்திலும் குறைவான நிலப்பரப்பைக் கொண்டதனால் "டெல்ப்ற்" எனப் பெயர் கொண்டது. ஏனைய ஆறு தீவுகளையும் விடப் பல்வகைச் சிறப்புடையது.

குடவிலி, மகாவிலி, மணற்றுறை, வெல்லை, பெரியதுறை, பனங்காணி, புகுமுனை எனச் சுற்றிவர இயற்கைத் துறைமுகங்களையும் மேற்கில் கோட்டைக்காட்டில் வெடியரசன் கோட்டை, மத்திய மணற்றுறையில் வீகாமன் கோட்டை, வெல்லை, புல்வெளி, ஐயன்பிட்டிப்புலவு, தாமளாப்பு வெளி என புல்வெளிகள் பல்வகைப் பட்சியினம் ஆநிரை, எருமை நிரை, ஆடுகள், குதிரைக் கூட்டங்கள், முயல், மான் போன்ற பிராணிகளுடன் பொற்சீந்தில் பாலறுகு, முத்து சங்கு, ஏனைய கடல்படுதிரவியமும் கொண்ட நாடு.

பல்வகைச் சிறப்புக் கொண்ட நெடுமேற்கில் பால், தயிர், நெய்யும், பூக்கள் வேறு பூஜா திரவியங்கள் நித்திய பூசைக்கு தினம் இராமேஸ்வரம் கொண்டு போவதாயின் நாட்டின் சிறப்பு உள்ளங்கை நெல்லிக்கனி. இத்தீவின் மேற்கில் நெழுவினிப் பிள்ளையார் கோவிலருகாமையில் உயர்குடியில் பாடசாலை அதிபர், ஆறுமுகம் கண்மணியம்மா (மாணிக்கம்) தம்பதியரின் அன்பின் வெளிப்பாடாக உதித்த தலைமகன் சாம்பசிவம் சற்புத்திரர். அருகிலுள்ள சைவப்பிரகாசாவில் ஆரம்பக் கல்வியையும், யாழ் இந்துக்கல்லூரி, நெடுந்தீவு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலைகளில் உயர் கல்வியையும் கற்றுத் தேறியவர். சிட்டுக் குருவிக்கென்ன கட்டுப்பாடு என அரச பதவிகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டமற்று வட்டக்கச்சி படித்த வாலிபர் திட்டத்தில் காணி பெற்று நண்பர்கள் பலருடன் விவசாயத்தை விருப்புடன் செய்தனர். அழகிலும், ஆண்மையிலும், அறிவிலும் பல அரிவையர்கள் விரும்பினர். தாய்வழி மச்சினிமார் பலர் போட்டியிட்டனர். அக்காலம் அரசகுமாரிகட்கு சுயம்வரம் வைத்த மாதிரி அன்னாரை ஒரு தலைக்காதலாக வலை விரித்த போதிலும் தாரமும், குருவும், தலைவிதி என்ற மாதிரி திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்பட்டதாக தந்தைவழி திருமதி சின்னத்தம்பி பொன்னம்மா தம்பதியரின் அன்பால் விழைந்த அழகும், அமைதியும், அறிவும், பண்பும் கொண்ட பரிசாரகிப் பதவியும் கொண்ட மைத்துனர் சிவயோகியின் சகோதரி இராஜேஸ்வரி அவர்களைப் பெற்றோர், பெரியோர், உற்றார் விருப்பிற்கமைய முறையாகத் திருமணம் செய்தார்.

அன்றிலும் பெடையும் போல என்றும் பிரியாது அரனடி எண்ணி அன்பு கலந்து கலாதேவி, குணராசன், சசிகலகுமாரி என்ற செல்வங்களைப் பெற்றனர். சசிகலகுமாரியை கொடுத்தவன் எடுத்துவிட்டான். கலாதேவியை கந்தையா பொன்னம்மா தம்பதியரின் குணக்குன்று குக கணேசலிங்கம் விவசாய விருத்தாப்பியருக்கு மணம்முடித்து யதார்த்திகா, பிரார்த்தன், கவியார்த்திகா, நிதார்த்தன் என்ற பேரச் செல்வங்களையும் மகன் ரஞ்சனுக்கு காங்கேசர் இலட்சுமி தம்பதியரின் தட்ஷணேஸ்வரி(செல்வி) யை முறை மணம் முடித்து கஜாநனி, யாழினி, பிரணவன் ஆகிய பேரச் செல்வங்களையும் பெற்று இல்லறத்தை நல்லறமாக குதூகலமாக வாழ்ந்து சிற்றின்ப வாழ்வை விட்டு பேரின்ப வாழ்விற்கு விரிசடையான் திருவடி நிழல் சென்றார்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான் உறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்களண்ணா!!!

அன்பின் கடல், அறிவில் இமயம், பொறுமையில் பூமி புஜவலிமையும், கஜபலமும் கொண்டவர் கடவுள் பக்தியும், கருணை உள்ளமும் கொண்டவர். ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற கொள்கையும் உடைய அண்ணா, தேசப்பற்றும் சுதந்திர வேட்கையும் உடையவர். சொல்லாதே செய்யென்று செய்தே முடிப்பவர். தாயாரிலும் எங்களறுவரிலும் உயிரை வைத்திருந்தவர். மெல்லிய இளநகையால் எல்லோரையும் தன்பக்கம் இழுத்து விடுவார்.

யாழ் இந்துக்கல்லூரியில் சிரேஷ்ட வகுப்பு படித்துக் கொண்டிருந்த வேளை எங்கள் மேலிட்ட தணியாக் காதலால் இந்துக் கல்லூரியை விட்டு சொந்த ஊரிலே கல்வியைத் தொடர்ந்த அண்ணா, கரப்பந்தாட்ட, உதைப்பந்தாட்ட வீரராக கம்பஹா வரை சென்று வெற்றியீட்டி வீரசிகரமமைத்தவர்.

சேர்ஜோன் கொத்தலாவலை பிரதமராக எமது தீவிற்கு விஜயம் செய்தார். ஹெலிகொப்ரரில் வந்திறங்கியவரை பாடசாலை வரவேற்றது. அதில் அண்ணா குதிரைப் பவனியின் முதல் தலைவனாக நல்ல அழகிய குதிரையில் அணிவகுப்புசி செய்த காட்சி எம்மையும், ஊரவரையும் மாணவர் அனைவரையும் நீங்காத காட்சியாக நெஞ்சில் நிரம்பியது. அன்று அனைவராலும் "எடின்பரோ கோமகன்" என்றழைக்கப்பட்டார். உண்மையிலேயே கோமகன்தான். இலிகிதர் பதவி, உதவிப் பொலிஸ் அதிகாரி நியமனம் எல்லாம் உதறிவிட்டு மேழிச் செல்வம் கோழைபடாது என்று வினாயகபுரம் வந்து நல்ல விவசாயியாக வாழ்ந்தவர். தாயார், சகோதரிகள் மூவர், தந்தையார், மருமகன் போன்ற தொடர்சியான அமரத்துவ நிகழ்வுகளால் துன்பக் கடலில் நீந்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேளை சாவுக்கொரு சாட்டென சிறு சுகவீனத்தில் வையத்தில் வாழ்வை முடித்து வைகுந்த வாழ்விற் கலந்தார். "தக்கார் தகவிலார் என்பது அவரவர் எச்சத்தாற் கொள்ளப்படும்" வள்ளுவர் வாய்குறள். பிள்ளைகள், பேரக்குழந்தைகள் எல்லாம் சீரும் சிறப்புற வாழ்கின்றனர்.

எங்களண்ணா எம்இதய தீபச்சுடர் மட்டுமல்ல, உற்றார், ஊரார், நண்பர் அனைவரது உள்ளங்களிலும் ஒளிச்சுடராகிப் பிரகாசிக்கின்றார். உண்மை ஒரு போதும் அழிவதில்லை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓரே பார்வையில் உறவுகள்

0 நாகப்பர்
+
0 வள்ளியம்மை

0 கந்தையா
+
0 வள்ளியம்மை

0 ஆறுமுகம் + 0 கண்மணியம்மா
சாம்பசிவம்
0 வதானாம்பிகை
0 கமலாசனம்மா
ரவீந்திரநாதன்
வாகீஸ்வரி
குமாரசூரியர்
தேவகுஞ்சரீ

மதியாபரணம்
+
0 இராசமாணிக்கவதனாம்பிகை
0 பவழராணி
ராகினிதேவி
நகுலஸ்ரீ
மோகன்ராஜ்
தண்மதி
0 சந்திரதாஸ்
ஜெகதீஸ்வரன்
ஜெயவதனி
சத்தியவதனி
சத்தியபாமா
வாகீஸ்

பரமநாதன்
+
0 கமலாசனம்மா
ஜெயகலா
ஜெயபாமினி

யோகராசா
+
தேவகுஞ்சரி
சயந்தன்
தயானி
வசீகரன்
விதுஷன்
அச்சுதன

0 வேலுப்பிள்ளை
+
0 நாகத்தப்பிள்ளை

0 கணபதிப்பிள்ளை
+
0 வள்ளியம்மை

0 சின்னத்தம்பி + 0 பொன்னம்மா
0 சிவயோகி
இராசேஸ்வரி

**சாம்பசிவம்**
+
இராசேஸ்வரி
கலாதேவி
குணராசன்
0 சசிகலகுமாரி

கணேசலிங்கம்
+
கலாதேவி
யதார்த்திகா
பிரார்த்தன்
கவியார்த்தன்
நிதார்த்தன்

ஏ.ஜ

குணராசன் (ரஞ்சன்)
+
தட்ஷணேஸ்வரி (செல்வி)
கஜானனி
யாழினி
பிரணவன்

ரவீந்திரநாதன்
+
இராசம்மா
செந்தில்ரவி
பானுஸ்ரீ
செந்தில்ரதன்
ராஜஸ்ரீ
சசீந்திரஸ்ரீ

0 சிவயோகி
+
புவனேஸ்வரி
கருணாதேவி
ஸ்ரீஸ்கந்தராசா
தனேஸ்வரி
ஞானதேவி
செந்தாமரை
குலராஜா
0

சிவபாக்கியம்
கருணா
கமலாதேவி
கமலவேணி

குமாரசூரியர்
+
சிவயோகம்
ஜெயபாரதி
விவிதபாரதி
நவநீதபாரதி
வசீகரன்

0 அமரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விநாயகர் வணக்கம்

ஐந்து கரத்தனை யானைமுகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

திருவுங் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்கவும்
பருவ மாய்நம துள்ளம் பழுக்கவும்
பெருகு மாழத்துப் பிள்ளையைப் பேணுவாம்

உள்ளமெனுங் கூடத்தில் ஊக்கமெனுந்
தறிநிறுவி உறுதியாகத்
தள்ளரிய அன்பென்னுந் தொடர்பூட்டி
இடைபடுத்தித் தறுகட் பாசக்
கள்ளவினைப் பசு போதகக் கவளமிடக்
களுத்துண்டு கருணை யென்னும்
வெள்ளமதம் பொழிசித்தி வேழத்தை
நினைந்து வருவினைகள் தீர்ப்பாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்ச புராணங்கள்

## தேவாரம்

தோடுடைய செவியன்விடை யேறியோர் தூவண்மதிசூடிக்
காடுடைய சுடலைப்பொடி பூசியென் னுள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மல ரான்முனைநாட் பணிந் தேத்தவருள் செய்த
பீடுடையபிர மாபுர மேவிய பெம்மானிவனன்றே.

கூற்றாயினவா றுவிலக் ககிலீர்
கொடுமை பலசெய் தனநா னறியேன்
ஏற்றா யடிக்கே யிரவும் பகலும்
பிரியா துவணங் குவனெப் பொழுதும்
தோற்றா தென்வயிற் றினகம் படியே
குடரோ டுதுடக் கிடமுடக் கியிட
ஆற்றே னடியே னதிகைக் கெடில
வீரட்டானத் துறையம் மானே.

பித்தாபிறை சூடிபெரு மானே அருளாளா
எத்தான்மற வாதே நினைக் கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர்-
அருட்டுறையுள்
அத்தாவுனக் காளாயினி அல்லேன் எனல் ஆமே.

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்தஆ ரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் றனக்குச்
செம்மையே யாய சிவபத மளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம் புறம்திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்தருளுவ தினியே

அன்றே என்தன் ஆவியும்
உடலும் உடைமையும் எல்லாமுங்
குன்றே யனையாய் என்னையாட்
கொண்டே போதே தொண்டிலையே
இன்றோர் இடையூ றெனக்குண்டோ
என்தோள் முக்கண எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாகமே

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டுகண்டுள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே

பக்தியாய் உணர்வோர் அருள்வாய் மடுத்துப்
பருகுதோ றமுதமொத் தவர்க்கே
தித்தியா திருக்கும் தேவர்கள்! இவர்தம்
திருவுரு இருந்தவர் பாரீர்
சத்தியாய்ச் சிவமாய் உலகெல்லாம் படைத்த
தனிமுழு முதலுமாய் அதற்கோர்
வித்துமாய் ஆரூர் ஆதியாய் வீதி
விடங்கராய் நடங்குலா வினரே

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை! வளர்கநம்
பக்தர்கள்! வஞ்சகர் போய்அகல
பொன்னின்செய் மண்டத்துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப்பிறவு யறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டும் கொடுத்தும் குடிகுடி யீசற்காட்
செய்மின் குழாம் புகுந்த
தண்டங் கடந்தபொருள் அளவில்லாதோர்
ஆனந்த வெள்ளப் பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ளபொருள்
என்றே பல்லாண்டு கூறுதுமே

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு
வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும்
வேண்டு நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும் போதுன்
அடியின்கீழ் இருக்க என்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானுலகு மண்ணுலகு வாழ மறை வாழப்
பான்மை தரு செய்ய தமிழ் பார்மிக வழங்க
ஞானமத வைந்துகர மூன்று விழி நால்வாய்
யானை முகவனைப் பரவி அஞ்சலி செய்கற்பாம்

தவறுமுலகெலாம் தந்த நான்முகன்
தேவிதன் துணைவியாய் செறிந்த பல்லுயிர்
நாவுதோறிருந்திடு நலங்கொள் வாணிதன்
நாவடி முடிமிசை புனைந்து போற்றுவாம்

## திருப்புகழ்

துள்ளுமத வேட்கைக் கணையாலே
தொல்லை நெடு நீலக் கடலாலே
மெள்ளவரு சோலைக் குயிலாலே
மெய் யுருகு மானைத் தருவாயே
தெள்ளு தமிழ் பாடத் தெளிவோனே
செய்ய குமரேசத் திறலோனே
வள்ளல் தொழு ஞானக் கழலோனே
வள்ளி மணவாளப் பெருமாளே

உம்பர்தருத் தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலிற் தேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேயருகிப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காகவனத் துணைவோனே
தந்தை வலத் தாலருள் கைக்கனியோனே
அம்பர்தனக் காணநிலைப் பொருளானே
ஐந்து கரத்தானை முகப் பெருமானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணகம லாலயத்தை அரைநிமிஷ நேரமட்டில்
தவமுறை தியானம் வைக்க அறியாத
சடகசட மூடமட்டி பலவினையி லேசளித்த
தமியன்மிடி யால்மயக்க முறுவேனோ
கருணைபுரி யாதிருப்ப தெனகுறையி வேளை செப்பு
கயிலைமலை நாதர்பெற்ற குமரோனே
கடகபுய மீதிரத்ந மணியணிபொன் மாலைசெச்சை
கமழுமண மார்கடப்ப மணிவோனே
தருணமிதை யாமிகுந்த கனமதுறு நீள்சவுக்ய
சகல செல்வ போகமிக்க பெருவாழ்வு
தகைமைசில ஞானமுத்தி பரகதி நீ கொடுத்து
தவிபுரிய வேணுநெய்த்த வடிவேலா
அருணதர பாதபத்ம மதுநிதமு மேதுதிக்க
அரிய தமிழ் தானளித்த மயில்வீரா
ஆதிசமய நேகமுற்ற பழனிமலை மீதுதித்த
அழக திரு வேரகத்தின் முருகோனே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலகலாவல்லி மாலை

வெண்டா மரைக்கன்றி நிபதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொலோ?
சகம் ஏழும் அளித்து
உண்டான் உறங்க ஒளித்தான்பித்
தாகவுண் டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே!

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய்
பங்க யாசனத்திற்
கூடும் பசும் பொற்கொடியே
கனதனக் குன்று மைம்பாற்
காடும் சுமக்கும் கரும்பே
சகல கலாவல்லியே!

அளிக்கும் செழுந்தமிழ்த் தெள்ளமுது
ஆர்ந்துன் அருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொலோ?
உளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக் கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகல கலாவல்லியே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கும் பனுவற் துறை தோய்ந்த
கல்வியும் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்வாய்
வடநூற் கடலும்
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர் செந்நாவில் நின்று
காக்கும் கருணைக் கடலே
சகல கலாவல்லியே!

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்னே?
நெடுந்தாட் கமலத்து
அஞ்சத்துவசம் உயர்த்தோன்
செந்நாவும் அகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே!

பண்ணும் பரதமும் கல்வியும்
தீஞ்சொற் பனுவலும் யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்காய்
ஏழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலும்
கனலும் வெங்காலு மன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கண்நல்காய்
உளங் கொண்டு தொண்டர்
தீட்டும் கலைத் தமிழ்தீம்பால்
அமுதம் தெளிக்கம் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே!

சொல்விற் பனமும் அவதானமும்
கல்வி சொல்ல வல்ல
நல்வித்தையும் தந்தடிமை கொள்வாய்
நளினாசனஞ் சேர்
செல்விக்கரிதென் றொருகாலமும்
சிதையானம நல்கும்
கல்விப் பெருஞ் செல்வப்பேறே
சகல கலாவல்லியே!

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கணடளவிற் பணியச் செய்வாய்
படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பலகோடியுண்டேனும்
விளம்பில் உன்போற்
கண்டகண்ட தெய்வம் முளதோ
சகல கலாவல்லியே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்கும் பொருட்கும் உயிராம் மெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்?
நிலந்தோய் புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோடு
அரசன்ன நாணநடை
கற்கும் பாதம்புயத் தாயே
சகல கலாவல்லியே!!!

உ

சிவமயம்

# சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்

தொல்லை யிலும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே - எல்லை
மறுவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
திருவா சகமென்னும் தேன்

நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுது மென்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி யாண்ட குருமனிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அனேகன் இறைவனடி வாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க
ஈசனடி போற்றி எந்தை யடி போற்றி
தேசனடி போற்றி சிவன்சே வடிபோற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவனடி போற்றி
ஆராத இன்பம் அருளும் மலை போற்றி
சிவனவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவனருளாலே அவன்றாள் வணங்கி
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்ல சுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம் விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்களேத்த
மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவ மென்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா வுனக்குக்
கலந்தவன் பாகிக்கசிந்துள் உருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கு மாரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் மொளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி யல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வாம் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வே
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனேயோ வென்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற்பிறவி அறுப்பானே யோவென்று
சொல்லற்கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுறை

## பன்னிரு திருமுறைகள் பற்றிய குறிப்புக்கள்

திருஞானசம்பந்த சுவாமிகள் பாடியருளிய மூன்று திருமுறைகள்
முதலாந்திருமுறை
இரண்டாம் திருமுறை
மூன்றாந் திருமுறை
இவற்றிலுள்ள மொத்தப் பதிகங்கள் - 384
மொத்தப் பாடல்கள் - 4159

சம்பந்தர் பாடிய திருமுறைகளுக்கு "திருக்கடைக்காப்பு" எனும் பெயர் வழங்கி வருகிறது.

திருநாவுக்கரசு சுவாமிகள் பாடியருளிய மூன்று திருமுறைகள்
நானகாம் திருமுறை
ஐந்தாம் திருமுறை
ஆறாந் திருமுறை
இவற்றிலுள்ள மொத்தப்பதிகங்கள் - 313
மொத்தப் பாடல்கள் - 3045

நாவுக்கரசர் பாடிய திருமுறைகள் "தேவாரம்" எனப் பெயர் வழங்கி வருகிறது.

சுந்தர மூர்த்தி நாயனார் பாடியருளியது ஏழாந் திருமுறை
. இதிலுள்ள பதிகங்கள் - 100
பாடல்கள் - 1026

சுந்தரர் பாடிய திருமுறைகளுக்கு "திருப்பாட்டு" எனப் பெயர் வழங்கி வருகின்றது.

மாணிக்கவாசக சுவாமிகள் பாடியருளிய திருவாசகமும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோவையாரும்

எட்டாந் திருமுறை
திருவாசகப் பாடல்கள் - 656
திருச்சிற்றம்பலம் கோவையார் - 400

ஒன்பது அருளாளர்கள் பாடியருளிய பாடல்கள் ஒன்பதாம் திருமுறை
இவற்றில் திருவிசைப்பா பதிகங்கள் - 29
பாடல்கள் - 303
திருப்பல்லாண்டுப் பாடல்கள் - 13
திருமூல தேவர் பாடியருளியது "திருமந்திரம்"
பத்தாந்திருமுறை
இதிலுள்ள மந்திரங்கள் - 9
பாடல்கள் - 3050

பன்னிரு அருளாளர்கள் பாடியருளியது பதினொராம் திருமுறை
இதிலுள்ள பிரபந்தங்கள் - 40

சேக்கிழார் சுவாமிகள் பாடியருளியது பன்னிரண்டாம் திருமுறை இது பெரிய புராணம் எனவும் திருத்தொண்டர் புராணம் எனவும் பேசப்படுகின்றது.

இதிலுள்ள காண்டம் - 2
சுருக்கம் - 13
பாடல்கள் - 4253

மொத்தமாக 27 அருளாளப் பெருமக்கள் பாடியருளிய பன்னிருதிருமுறைகளிலுமுள்ள மொத்த பாடல்கள் 18290 ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

திருச்சிற்றம்பலம்

# திருப்பொற் சுண்ணம்

முத்துநற் நாமம் பூமாலை தூக்கி
முளைகுடந் தூபம் நற்றீபம் வைம்பின்
சக்தியும் சோமியும் பார்மகளும்
நாமகளோடு பல்லாண் டிசைமின்
சித்தியும் கௌரியும் பார்வதியும்
கங்கையும் வந்துகவரி கொண்மின்
அத்தன் ஐயாறன் அம்மாவைப் பாடி
ஆடப் பொற் சுண்ணம் இடித்துநாமே

பூவியல் வார்சடை எம்பிரார்க்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்க வேண்டும்
மாலின் வடுவகி ரன்ன கண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறம் நிலாமே
குனிமின் தொழுமின் எங்கோன் எங்கூத்தன்
தேவியும் தானும்வந் தெம்மையாளச்
செம்பொன் செய் சுண்ணம் இடித்துநாமே

சுந்தர நீறணிந் தும் மெழுகித்
தூய பொன் சிந்தி நிதி பரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டி எங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோன் அயன்தன் பெருமான்
ஆழியான் நாதன் நல்வேலன் தந்தை
எந்தரன் ஆளுமையான் கொழுநற்கு
ஏய்ந்த பொற்சுண்ணம் இடித்துநாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசணி மின்கள் உலக்கை யெல்லாம்
காம்பனி மின்கள் கறையுரைலை
நேசமுடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்று வாழ்த்தி
தேசமெல்லாம் புகழ்ந்தாடும் கச்சித்
திருவேகம்பன் செம்பொற் கோயில்பாடிப்
பாசவினையைப் பறித்து நின்று
பாடிப் பொற் சுண்ணம் இடித்துநாமே

அறுகெடுப்பார் அயனும் மரியும்
அன்றிமற் றிந்தர னோடமரர்
நறுமுறு தேவர் கணங்களெல்லாம்
நம்மிற் பின் பல்ல தெடுக்க வொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்த வில்லி
திருலோகம்பன் செம்பொற் கோயில் பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கன் அப்பதற்கு
ஆடப் பொற்சுண்ணம் இடித்துநாமே

உலக்கை பல ஒச்சுவார் பெரியவர்
உலகமெல்லாம் உரல் போதாதென்றே
கலக்க வடியவர் வந்து நின்றார்
காண வுலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை ஆண்டுகொண்டு
நான் மலர்ப்பாதங்கள் சூடத் தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்து பொற் சுண்ணம் இடித்துநாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூடகந் தோள்வளை ஆர்ப்ப ஆர்ப்ப
        தொண்டர் குழாமெழுந் தார்ப்ப ஆர்ப்ப
நாடவர் தந்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
        நாமும் அவர்தமை ஆர்ப்ப ஆர்ப்ப
பாடக மெல்லடியார்க்கும் மங்கை
        பங்கினன் எங்கள் பாரபரானுக்கு
ஆடக மாமலை அன்ன கோவுக்கு
        ஆடப் பொற்சுண்ணம் இடித்து நாமே

வாட்டங் கண்மட மங்கை நல்லீர்
        வரிவளை ஆர்பவன் கொங்கை பொங்கத்
தோட்டிரு முண்டந்துதைத் திலங்கச்
        சோத்தெம்பிரா னென்று சொல்லிச் சொல்லி
நாட்கொண்ட நான்மலர்ப் பாதங் காட்டி
        நாயிற் கடைப்பட்ட நன்மையிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப் பாடி
        ஆடப் பொற்சுண்ணம் இடித்து நாமே

வையுக மெல்லாம் உரலதாக
        மாமேரு என்னும் உலக்கை நாட்டி
மெய்யேனும் மஞ்சள் நிறைய ஆட்டி
        மேதகு தென்னை பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப் பாடிச்
        செம்பொன் உலக்கை வலக்கை பற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
        ஆடப் பொற்சுண்ணம் இடித்து நாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தணி கொங்கைகள் ஆடஆட
மொய்குழல் வண்டினம் ஆடஆட
சித்தம் சிவனொடும் ஆடஆடச்
செங்கயம் கண்பனி ஆடஆடப்
பித்தெம் பிரானொடும் ஆடஆடப்
பிறவி பிறரொடும் ஆடஆட
அத்தன் கருணையோ டாடஆட
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே

மாடு நகைவாள் நிலா வெறிப்ப
வாய்திறந் தம்பவந் துடிப்ப
பாடுமின் நந்தம்மை ஆண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப் பாடித்
தேடுமின் எம் பெருமானைத் தேடிச்
சித்தம் களிப்பத் திகைத்துத் தேவி
ஆடுமின் அம்பலத் தாடினானுக்கு
ஆடப் பொற்சுண்ணம் இடித்துநாமே

மையமர் கண்டனை வானநாடா
மருந்தனை மாணிக்கக் கூத்தன் தன்னை
ஐயனை ஐயர் பிரானை நம்மை
அகப்படுத்தாட் கொண்டருமை காட்டும்
பொய்யர் தம் பொய்யனை மெய்யர் மெய்யைப்
போதரிக் கண்ணினைப் பொற்றொடித்தோள்
பையர வல் குல் மடந்தை நல்லீர்
பாடிப் பொற்சுண்ணம் இடித்துநாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்னிடைச் செந்துவர் வாய்க் கருங்கன்
வெண்ணகைப் பண்ணமர்மென் மொழியீர்
என்னுடை ஆரமுது எங்கள் அப்பன்
எம்பெருமான் இமவான் கட்குத்
தன்னுடைக்கேள்வன் மகன் தகப்பன்
தமையன் எம்ஐயன் தாள்கள் பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கை நல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே

சங்கம் அரற்றச் சிலம் பொலிம்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாய் இத முந் துடிப்பச்
சேயிழையீர் சிவலோகம் பாடிக்
கங்கை இரப்ப அரா இரைக்கும்
கற்றைச் சடை முடியான் கழற்கே
பொங்கிய காதலில் கொங்கை பொங்கப்
பொற்திருச் சுண்ணம் இடித்துநாமே

ஞானக் கரும்பின் தெளிவைப் பாகை
நாடற் கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானைச்
சித்தம் புகுந்து தித்திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டு கொண்ட
கூத்தனை நாத்தழும்பேற வாழ்த்திப்
பானல் தடங்கண் மடந்தை நல்லீர்
பாடிப் பொற்சுண்ணம் இடித்துநாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவகை நாமுவந் தன்பர் தம்மோடு
ஆட்செய்யும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர் கனாவிலும் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டும் செல்வச்
சேவகம் ஏந்திய வெல் கொடியான
சிவபெருமான் புரம் செற்ற கொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப் பாடிச்
செம் பொன் செய் சுண்ணம் இடித்துநாமே

தேகை மாமலர்க் கொன்றை பாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வாகை மாமதிப் பிள்ளை பாடி
மால்லிடை பாடி வலக்கை ஏந்தும்
ஊகை மாமமுச் சூலம் பாடி
உம்பரும் இம்பரும் உய்ய அன்று
போகை மாக நஞ்சுண்டல் பாடிப்
பொற்திருச் சுண்ணம் இடித்துநாமே

அயன்தலை கொண்டு செண்பால்பாடி
அருக்கன் எயிறு பறித்தல் பாடி
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல் பாடி
காலனைக் காலால் உதைத்தல் பாடி
இயந்தன முப்புரம் எய்தல் பாடி
ஏழை அடியோமை ஆண்டுகொண்ட
நயந்தனைப் பாடி நின்றாடியாடி
நாதற்குச் சுண்ணம் இடித்துநாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்ட மலர்க்கொன்றை மாலை பாடி
மத்தமும்பாடி மதியும் பாடிச்
சிட்டர்கள் வாழும் தென்தில்லை பாடிச்
சிற்றம்பலத் தெங்கள் செல்வம் பாடிக்
கட்டிய மாசுணைக் கச்சை பாடி
கங்கணம் பாடி பாவித்த கைம்மேல்
இட்டு நின்றாடும் அரவம் பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்துநாமே

வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்மையும் பொய்மையும் ஆயினார்க்கு
சோதியுமாய் இருள் ஆயினார்க்குச்
துன்பமுமாய் இன்பம் ஆயினாக்குப்
பாதியுமாய் முற்றும் ஆயினார்க்குப்
பந்தமுமாய் வீடும் ஆயினார்க்குப்
ஆதியும் அந்தமும் ஆயினார்க்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யூரோ (EURO) நாணயம்

பதினொரு ஐரோப்பிய நாடுகள் ஒன்று சேர்ந்து தமக்கென உருவாக்கிய பொது நாணயமே யூரோ. 1999 ஜனவரி 01 முதல் அமுலுக்கு வந்தது. 2002 ஜனவரியில் இருந்தே யூரோ நோட்டுக்களும், நாணயங்களும் புழக்கத்துக்கு வந்தது.

இங்கிலாந்து, டென்மார்க், சுவீடன் ஆகிய நாடுகள் யூரோ நாணயத்தை இன்னும் ஏற்றுக் கொள்ளவில்லை.

---

# உறுப்புக்களும், அவையுடன் தொடர்பு கொண்ட நோய்களும்

| உறுப்பு | நோய் |
|---|---|
| நுரையீரல் | தொழுநோய் |
| நரம்புகள் | தளர்வாதம் |
| நுரையீரல்கள் | நிமோனியா |
| தோல் | எக்ஸிமா |
| மண்ணீரல் | மலேரியா |
| பல் | பயோரியா |
| கண் | கட்ராக்ட் |
| தொண்டை | காயீட்டர் |
| குடல் | தைபோயிட் |
| குடல்வால் | அப்பன்டிஸைட்டிஸ் |
| கல்லீரல் | டான்ஸிலைட்டில்ஸ் |
| பான்ஸில்ஸ் | |
| கணயச்சுரப்பி | டயபெற்றிக்ஸ் |
| முதுகெலும்பு, மூளை | மெயின் சிட்டிஸ் |

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமுது மொழிகள்

பொன்னை உரசிப் பார்த்து அறியலாம் - மனிதனை
விவகாரம் நடத்தும் முறையிலிருந்து அறியலாம்
எருமையை அது சுமக்கும் சுமையால் அறியலாம்
பெண்களை அறிய எந்த முறையும் இல்லை.

*- பஞ்சதந்திரம்*

நெஞ்சில் குற்றமுள்ளவனுக்கு ஒவ்வொரு கண்ணும்
தன்னையே பார்ப்பது போல் தோன்றும்

*- ஷேக்ஸ்பியர்*

மனநிறைவு கொண்ட மனிதன் எந்த நேரத்திலும்
ஏழையாக இருப்பது இல்லை, மனநிறைவு இல்லாதவன்
எப்போதும் பணக்காரனாக இருக்க முடியாது.

*- ஜார்ஜ எலியட்*

இருளில் பயப்படும் குழந்தையைவிட வெளிச்சத்தில்
பயப்படும் மனிதன் மோசமானவன்

*- எமர்சன்*

அமைதியாக இருந்தால் எவரையும் வசப்படுத்திவிட
முடியும்

*- செயின்ட் ஜஸ்ட்*

உலகை அறிந்தவன் வெட்கப்படமாட்டான்
தன்னை அறிந்தவன் அகம்பாவமடையமாட்டான்

*- விம்மன்ஸ்*

மேன்மையை நாடிச் செல்பவனுக்கு, சிறுகுறைகள்
உறுத்தாது

*- யொஹேறன் லேவேட்டா*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவனுடைய மனம் தூய்மையாக இல்லாவிட்டால் பணமோ, வலிமையோ, அழகோ அவனுக்கு பயன்படமாட்டாது.

- *அரிஸ்ரோட்டில்*

# அறிந்து கொள்ள வேண்டியவை

| | |
|---|---|
| உருகும் உள்ளத்தில் உதிப்பது | அன்பு |
| இறுகும் உள்ளத்தில் எழுவது | அகந்தை |
| அன்பு விளைவிப்பது | ஒற்றமை |
| அகந்தை விளைவிப்பது | வேற்றுமை |
| வேற்றுமையால் விளைவது | துன்பம் |
| வருவதும், போவதும் இரண்டு | துன்பம், இன்பம் |
| வந்தால் போகாதவை இரண்டு | புகழ், பழி |
| போனால் வராதவை இரண்டு | மானம், உயிர் |
| தானாக வருவது இரண்டு | இளமை, முதுமை |
| நம்முடன் வருவது இரண்டு | பாவம், புண்ணியம் |
| அடக்க முடியாதது இரண்டு | ஆசை, துக்கம் |
| தவிர்க்க முடியாதது இரண்டு | பசி, தாகம் |
| நம்மால் பிரிக்க முடியாதது இரண்டு | பந்தம், பாசம் |
| அழிவைத்தருவது இரண்டு | பொறாமை, கோபம் |
| எல்லோர்க்கும் சமனானது இரண்டு | இறப்பு, பிறப்பு |
| அறிவித்தால் அறியும் பொருள் | பசு |
| அறிவித்தால் அறியமாட்டாத பொருள் | பாசம் |

---

பகைமையால் எப்போதும் அழிவுதான் - அன்பு ஒரு போதும் மடிவதில்லை

- மகாத்மா காந்தி

நம் கண்முன்பு உள்ளதைச் செய்வதே நம் மேலான கடமை

- கார்லைஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ உன் வாழ்க்கையில் முன்னேற வேண்டுமானால் உன்னுடைய கால்களால் நடந்து போ
மற்றவர்களின் முதுகின்மேல் ஏறிப்போக விரும்பாதே
அது உனக்கு ஆபத்து

- நியட்ரே

அன்பு என்பது கொடுப்பது

- மகாத்மா காந்தி

ஒரு தீயவனை வென்று காட்ட இன்னொரு தீயவன்
எப்போதும் உண்டு - அறநெறி

- ஒரு மகான்

தேவைக்குப் போதுமான செல்வம் உன்னைச் சுமக்கும்
தேவைக்கு அதிகமான செல்வம் உனக்குச் சுமையாகும்

- ஓர் அறிஞர்

பெரிய மலைகளைக் கூடப் புரட்டி விடலாம்
மனதை அடக்குவது தான் கடினம்

- அறநெறி

# அருட்சுடர்

இவ்வுலகம் கோழைகளுக்கல்ல ஓட முயலாதே
வெற்றியையோ தோல்வியையோ எதிர்பார்க்காதே

யாருடைய நம்பிக்கையையும் குலைக்க முயலாதே
இயலுமானால் அவனுக்கு அதைவிட மேலான
ஒன்றைக்கொடு

நீ எதையும் எல்லாவற்றையும் சாதிக்க கூடியவன்
எல்லாம் வல்லவன் நீ

இன்பம் மனிதன் முன் தோன்றும் போது
தனது தலை மீது துன்ப முடியைச் சூடி வருகின்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறரிடம் உள்ள தீய தன்மைகளை எண்ண வேண்டாம்
அது அறிவின்மையும் தளர்ச்சியும் ஆகும்.

செல்வந்தர்களை வழிபடத் தொடங்கும் நாள் முதலே
ஒரு சமயத்தின் கேடு ஆரம்பிக்கிறது

நான் எதையும் சாதிக்க வல்லவன் என்று சொல்
நீ உறுதியுடன் இருந்தால் பாம்பின் விஷம் கூடச்
சக்தியற்றதாகி விடும்.

தமக்கு வேண்டிய ஒரே பொருள் பலமே
உலகத்தில் நோய்க்கு மருந்தும் பலமே

பணக்காரர்களின் கொடுமைக்கு உட்படும்போது
ஏழைகளுக்கு கட்டாயம் வேண்டிய மருந்தும் பலமே

எழுந்து நில்லுங்கள், தைரியமாயிருங்கள்
பலமுடையவர்களாகுங்கள், உங்கள் விதியை படைத்தது
நீங்களே என்பதை அறியுங்கள்

*-சுவாமி விவேகானந்தர்*

பிரதான வைத்தியசாலைகளும் ஆராச்சி நிலையங்களும்

புற்று நோய் வைத்தியசாலை - மகரகம
தொழு நோய் வைத்தியசாலை - மாந்தீவு
ஆயுள் வேத ஆராச்சிநிலையம் - நாவின்ன
மேல்நாட்டு வைத்திய ஆராச்சி நிலையம் - கொழும்பு
காசநோய் ஆஸ்பத்திரி - காங்கேசன்துறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனைக்கு

உயர்ந்த மனிதர்களின் பிள்ளைகளாய்ப் பிறப்பது
தற்செயலாக நிகழ்வது - ஆனால்
உயர்ந்த மனிதனாக இறப்பது நம்
கையில் தான் இருக்கிறது

*போர்க்குவின்*

ஒரு செடியை வளர்ப்பதற்கு என்னென்ன
தேவையோ அதைப் போன்று
மனித பண்பாட்டை வளர்க்க
கல்வி மிகமிக அவசியம்

*ரூசோ*

# வெற்றியின் திறவுகோல்


அன்பு காட்டு ஆனால் அடிமையாகி விடாதே
இரக்கம் காட்டு ஆனால் ஏமாந்து போகாதே
பணிவாய் இரு ஆனால் கோழையாய் இராதே
கண்டிப்பாய் இரு ஆனால் கோபப்படாதே
சிக்கனமாய் இரு ஆனால் கஞ்சனாய் இராதே
வீரனாய் இரு ஆனால் போக்கிரியாய் இராதே
சுறுசுறுப்பாய் இரு ஆனால் பதட்டப்படாதே
தர்மம் செய் ஆனால் ஆண்டி ஆகி விடாதே
உழைப்பை நம்பு ஆனால் கடவுளை மறந்து விடாதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாஜ்மஹால்

## ஒரு காதல் நினைவுச் சின்னம்



இந்தியாவின் ஆக்ரா நகரில் ஜமுனை நதியின் வலது கரையோரத்தில், சந்திர ஒளியிலிருந்து செதுக்கியது போன்று, தாஜ்மஹால் நினைவு மாளிகை, கடந்த 344 ஆண்டுகளாகக் காட்சி தந்து கொண்டிருக்கின்றது. புதிய உலக அதிசயங்களில் ஒன்றாக இந்தச் சலவைக்கல் பளிங்கு மாளிகை துலங்குகின்றது. இந்தப் பளிங்கு மாளிகையைக் கட்டுவித்தவன் முகலாய சக்கரவர்த்தியான சார்ஜஹான் என்பவனாவான். மிகுந்த கலைத்துவத்தோடு உலகமே வியக்கும் வண்ணம் இந்த மாளிகையை அமைப்பித்துள்ளான். அவனுக்கு மூன்று மனைவியர் இருந்தும், அவனது காதலுக்குப்பாத்திரமான மும்தாய்மகால் என்பவள் நினைவாக இந்த தாஜ்மஹாலை மன்னன் சார்ஜஹான் அமைப்பித்தான். வாழ்க்கையில் ஒவ்வொருவரும் தரிசிக்க வேண்டிய கலைப் பொக்கிசம் தாஜ்மஹால் ஆகும்.

கேள்விப்படுகின்ற அழகினைவிட மிக அழகாக இருக்கின்ற ஒரு சில விடயங்களில் தாஜ்மஹால் ஒன்று எனப் பிரபல நாவலாசிரியர் பேர்ல்பெக் கூறுகிறார். ஆக்ராவிற்கு விஜயம் செய்த அனைவரும் இதனை அங்கீகரித்துள்ளனர். தாஜ்மஹால் அதற்கு நிகராக எதுவுமில்லை. அது தனித்துவமான அற்புதம். பாரசீக, இந்து, இந்திய இஸ்லாமிய மத கலாம்சங்கள் அனைத்தின் கூட்ட வடிவம். 19ஆம் நூற்றாண்டில் ஆக்ராவிற்கு வருகை தந்த சேர்.வில்லியம் ஹென்றி சிலிமன் தனது மனைவி அமிலியிடம் கேட்டார். இந்த தாஜ்மஹாலைப் பற்றி என்ன நினைக்கிறீர்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் நாளையே சாவதற்குத் தயார் என்றாள் அமிலி, இது போல என் நினைவாக எனக்கொரு மாளிகை கட்டப்படுமாயின்.

மகாராணி மும்தாஜ் மகால் 1593ஆம் ஆண்டு பார்சிகப் பிரபு ஒருவரின் மகளாகப் பிறந்தாள். மிகுந்த அழகுடையவள். அவ்வேளை அவள் அர்ஜீமான்ட் என அழைக்கப்பட்டாள். பதினைந்து பாராயம் இருக்கும் போது முகாலய இளவரசனான சூர்ராம்(பிற்காலச் சக்கரவர்த்தி சார்ஜஹான்) என்பவனுக்கு நிச்சயதார்த்தம் செய்யப்பட்டாள். ஐந்து ஆண்டுகள் கழிந்த பின்னர். 1612 மே மாதம் 20ஆந் திகதி சோதிடர்கள் கணிப்பின்படி திருமணம் நிகழ்ந்தேறியது. இளவரசன் குர்ராம் தனது அழகு ராணிக்க மும்தாஜ் மகால் எனப் பெயரிட்டான். அதனால் தான் சார்ஜகான் பின்னர் அவள் நினைவாகக் கட்டிய சலவைக்கல் மாளிகை தாஜ்மஹால் என்ற பெயரைப் பெற்றது.

முகாலயச் சக்கரவர்த்தி ஜகாங்கீர் என்பவனுடைய இரண்டாவது மனைவியின் மகன் இளவரசன் குர்ராம் ஆவான். அவன் தனது இளமைப்பருவத்தில் மருத்துவம், புவியியல், சமயவியல் ஆகிய பாடங்களைக் கற்றுத் தேறியிருந்தான்.தந்தையின் பின் முகலாய சாம்ராச்சியத்தின் சக்கரவர்த்தியாக முடிசூடிக் கொண்டபோது அவன் தனது பெயரை சார்ஜகான் என மாற்றிக் கொண்டான். சிம்மாசனம் ஏறியதும் அரச கட்டிலிற்குப் போட்டியாக மாறக்கூடிய ஆண் உறவினர்கள் அனைவரையும் அழிப்பித்தான்.

சார்ஜகானுக்கும் மும்தாஜ் மாகாலுக்கும் மொத்தமாகப் பதினான்கு பிள்ளைகள் பிறந்தார்கள். ஏழு பேர் இளவயதில் காலமானார்கள். 1631 ஜீன் மாதம் பதினான்காவது குழந்தைப் பேற்றின் போது மன்னனின் காதல் மனைவி மரணமடைய நேர்ந்தது. சார்ஜகான் தன் காதல் மனைவி மும்தாஜை கணமும் விட்டுப் பிரிய விரும்பாதவன் 1631 ஆம் ஆண்டு யுத்த களத்திற்கும் தன்னுடன் கூடவே கர்ப்பிணியான மும்தாஜை அழைத்துச் சென்றுள்ளான். இந்தப் பயணத்தின் விளைவாகவே பிள்ளைப்பேற்றின் போது அவள் மரணமடைய நேர்ந்தது. சார்ஜகான் பெரும் துன்பத்திற்குள்ளானான். அரண்மனையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கீதம் ஒலிக்கக் கூடாதென அறிவித்தான். நிற அங்கிகளை அணிவதைக் கைவிட்டான். அலங்காரச் சாலவைகளை அணியாது தவிர்த்தான். அரண்மனைப் பிரதானிகளைப் பார்ப்பதைத் தவிர்த்தான். எட்டு நாட்கள் தனிஅறை ஒன்றினுள் தனித்திருந்து துக்கமனுஷ்டித்தான். உணவின்றியே அந்த நாட்களைக் கழித்தான். நீண்ட காலம் இவ்வாறு துயரத்தைக் கொண்டாடினான். அத்துயர வெளிப்பாடாகச் சலவைக் கற்களால் தனது இனிய மனைவிக்கு ஒரு நினைவு மாளிகையை உருவாக்க எண்ணினான்.

1632ஆம் ஆண்டு தாஜ்மஹால் கட்டிட வேலைகள் ஆரம்பமாயின. தனது அரண்மனையிலிருந்து எப்பொழுதும் பார்வையில் படக்கூடியதான இடத்தில், யமுனையின் வலது கரையில், தாஜ்மஹாலைக் கட்டுவதற்கான இடத்தை தேர்ந்தெடுத்துள்ளான். இருபதினாயிரம் வேலையாட்கள் இருபத்திரண்டு ஆண்டுகள் இரவுபகலாகத் தாஜ்மஹாலைக் கட்டியெழுப்ப உழைத்துள்ளனர். தாஜ்மஹாலை கட்டவதற்கான வெண்சலவைக்கல் மக்ரானா, ராஜஸ்தான் மாநிலத்தின் ரய்யாலா ஆகிய இடங்களிலிருந்து வெட்டியெடுத்துக் கொண்டு வரப்பட்டது. நீலநிறக் கற்கள் (**lapis lazuli**) இலங்கையிலிருந்து தருவிக்கப்பட்டன. 40 வகையான பளிங்குக் கற்கள் தாஜ்மஹாலை அமைக்கப்பயன்பட்டுள்ளன. அவற்றோடு விலையுயர்ந்த வைரக்கற்கள் ஆங்காங்கு பொருத்தமாகப் பொருத்தப்படடிருந்தன. இன்று அவை களவாடப்பட்டுவிட்டன.

வெண் சலவைக்கற்கள் அற்புதமாக வெட்டப்பட்டு பிணைக்கப்பட்டுள்ளன. சலவைக்கற்களில் ஜன்னல்கள், வண்ண வேலைப்பாட்டுத் திரைகள், பூ வேலைகள் என நுட்பமான கலைத்திறன் மிக்க செதுக்கல்கள் சிற்பிகளால் அமைக்கப்பட்டுள்ளள. மத்திய ஆசியாவின் புக்காராப் பகுதியிலிருந்து பூ வேலைச் சலவைக்கற்களில் செதுக்குவோர் அழைத்துவரப்பட்டனர். தாஜ்மஹாலின் கோளக்கவிப்புகளை வடிவமைக்க கொன்ஸ்தாந்தி நோபிளிலிருந்து இஸ்மாயில் கான்ரூபி என்ற சிற்பக் கலைஞர் அழைக்கப்பட்டார். தாஜ்மஹாலின் சுவர்களில் எழுத்துக்களைப் பொறிப்பதற்காக அமாறட்கான் சிராசி என்பவர் நியமிக்கப்பட்டார். எல்லா கரையில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிபுணர்களையும் இணைத்து தாஜ்மஹாலை உருவாக்கி முடிக்கும் கட்டிடக் கலைஞராக லாகூரைச் சேர்ந்த உஸராட் அகமத் என்பவர் விளங்கினார். தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டிடக் கலைஞர்கள், சிற்பிகள் ஆகியோரின் 22 வருட கூட்டு முயற்சியின் விளைவாகத் தாஜ்மஹால் எழுந்தது.

தாஜ்மஹாலின் முன் பக்கத்தில் பெரும் பூந்தோட்டமும் தாஜ்மஹாலின் முழு வடிவைப் பிரதிபலிக்கும் தடாகமும் உள்ளது. வான் நோக்கி உயர்ந்து ஒளிரும் தாஜ்மஹாலை, கீழ் நோக்கி தாடக நீரில் அதன் பிரதிபிம்பத்தை காண்பது ஓர் இனிய அனுபவம். தாஜ்மஹால் 22 அடி உயரமான மாபிள் தள மேடையில் அமைக்கப்பட்டுள்ளது. ஏறத்தாழ 313 சதுர அடிப்பரப்பினதாக இந்த மாபிள் தளமேடையுள்ளது. இந்த மேடையின் நான்கு மூலைகளிலும் 137 அடி உயரமான மினராத் எனப்படும் கோபுரங்கள் அமைந்துள்ளன. இந்த 22 அடி உயரமான மேடைக்கு அழைத்துச் செல்லும் பளிங்குக் கற்படிகளும் உள்ளன. காலணிகளைக் கழற்றிவிட்டே இந்தப் படிகளில் ஏறிச் செல்ல வேண்டும். தாஜ்மஹாலின் பிரதான வளைவு, வாசலில், கரும் சலவைக்கல்லில் குரான் வார்த்தைகள் பொழியப்பட்டுள்ளன. உள்ளே செல்லில் மும்தாஜ் மகாலினதும், மன்னன் சார்ஜகானினதும் சமாதிகளைக் காணலாம். அற்புதக் கைவண்ணம் மிக்க சமாதிகள், சலவைக்கல் பலகைகளில் வண்ண வேலைப்பாடுகள், அந்த சமாதிகளை வேலியிட்டுள்ளன. சரி மத்தியில் மும்தாஜின் சமாதியுள்ளது. அதன் அருகில் வடிவில் சற்றுப் பெரிதான சார்ஜகானின் சமாதி அமைக்கப்பட்டுள்ளது. பார்சிக் மொழியில் மும்தாஜ்யின் சமாதியில "மும்தாஜ் மகால் என்றழைக்கப்பட்ட அர்ஜீமான்ட் பானுபேகம் சமாதி. இறந்த ஆண்டு 1040 (1631 **AD**)" எனப் பொறிக்கப்பட்டுள்ளது.

மும்தாஜின் வலது பக்க சமாதியில் சார்ஜகான் உறங்குகிறார். சார்ஜகான் தன் காதல் மனைவிக்காகக் கட்டிய தாஜ்மஹாலில் தன்னை அடக்கம் செய்து கொள்ள விரும்பியிருக்கவில்லை. அவன் தனக்கென கருமையான சலவைக்கல்லால் இன்னொரு மகாலை யமுனை நதியின் இடது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுவதற்கு திட்டமிட்டான். இந்த இரு மகால்களையும் ஒரு பாலத்தால் இணைக்கவும் எண்ணியிருந்தான். ஆனால் அவனை அடுத்து சக்கரவர்த்தியான அவுரங்கசீப், "எனது தந்தையின் காதலுக்குப் பாத்திரமானவளின் அருகிலேயே அவரையும் அடக்கம் செய்வதே பொருத்தமானது" என எண்ணிச் செயற்படுத்தினான். உண்மையில் தாஜ்மஹாலின் மாளிகை மத்தியில் உள்ள சமாதிகளுக்கு நேர் கீழே இருக்கின்ற அறையில் தான் அவர்களின் சடலங்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளன. கீழேயுள்ள சுரங்க அறைக்குள் ஒடுங்கிய படிகள் மூலம் இறங்கிச் செல்லில் அவற்றைக் காணலாம்.

மும்தாஜ் மகால் இறந்ததன் பின்னர் 35 ஆண்டுகள் வரை சார்ஜகான் வாழ்ந்தான். அவனுடைய இறுதிக்காலம் இனிமையானதன்று. அவனுடைய புதல்வர்கள் சிம்மாசனத்திற்காகப் போட்டியிட்டனர். இறுதியில் அவுரங்கசீப் ஆட்சியுரிமைப் போட்டியில் வெற்றி பெற்றான். தனது தந்தையைச் சிறைப்படுத்தி ஆக்ராக் கோட்டையில் சிறையிட்டான். "முகாலய நாட்டின் செல்வத்தை தாஜ்மஹால் கட்டுவதிலும், தனக்கென கரும் சலவைக்கல் மாளிகை கட்டுவதற்கும் மன்னர் வீண் விரயம் செய்தார். ஆயிரக்கணக்கான உழைப்பாளிகளின் உழைப்பை இந்த ஆடம்பர மாளிகைக்காக அர்ப்பணித்தார்." என அவுரங்கசீப் குற்றம் சுமத்தினான். ஆக்ரா கோட்டைச் சிறையிலிருந்து தாஜ்மஹாலைப் பார்ப்பதற்கு வசதியாகச் சிறைச் சுவரில் ஒரு ஜன்னலை அவுரங்கசீப் அமைத்துக் கொடுத்தான். சார்ஜகானின் இறுதிக் காலம் இவ்வாறு கழிந்தது. 1666 ஜனவரியில் தான் கட்டிய நினைவு மாளிகையைப் பார்த்தவாறே சார்ஜகான் மரணமடைந்தான். அவன் விருப்பிற்கு மாறாக அந்த தாஜ்மஹாலிலேயே சமாதி வைக்கப்பட்டான்.

சார்ஜகான் தனது 74வது வயதில் காலமானான். இறந்த பின்னரும் அவனது விழிகள் தாஜ்மஹாலைப் பார்த்தபடியே திறந்து கிடந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்டுபிடிப்புக்கள்

| கண்டுபிடித்தவை | கண்டுபிடித்தவர் | ஆண்டு | நாடு |
|---|---|---|---|
| அச்சு(உருட்டல்) | ரிச்சர்ட்டு ஹோ | 1846 | அமெரிக்கா |
| அச்சுக்கூடம் | ஜோஸன் கூடன்பர்க் | 1455 | ஜெர்மனி |
| ஆகாயவிமானம் | ஆர்வில் மற்றும் வில்பட்சகோதரர்கள் | 1903 | அமெரிக்கா |
| இசைத்தட்டு | டாக்டர் பீட்டர் கோல்ட் | 1948 | அமெரிக்கா |
| இயந்திரத்துப்பாக்கி | ஸேம்ஸ்பாக்கில் | 1718 | பிரட்டன் |
| இரட்டைக்குவிவுவில்லை | பெஞ்சமின்பிராங்களின் | 1780 | அமெரிக்கா |
| ஊக்கு | வால்டர்கண்ட் | 1849 | அமெரிக்கா |
| எஃகு உற்பத்தி | ஸொன்றி பெஸீமர் | 1855 | பிரிட்டன் |
| எஃகு(துருப்பிடிக்காதது) | ஹாரிபிரியர்லி | 1913 | பிரிட்டன் |
| எக்ஸ்கதிர் எழுதுதல் | வில்ஹெல்ம்கே.ராண்ட்ஜங்ன | 1895 | ஜெர்மனி |
| ஒலிபெருக்கி | ஸரஸ் ஷார்ட் | 1900 | பிரிட்டன் |
| கப்பல்(கடல்வழி) | கிரேக்கர்கள் | கி.மு 1250 | |
| கப்பல்கள்(சுழலி) | மேதகு சர்.சி.பார்சஸ் | 1894 | பீரிட்டன் |
| நீராவி | ஜே.சி.பெரியர் | 1775 | பிரான்ஸ் |
| ஸகடிகாரம்(இயந்திரவியல்) | ஐ.ஸாசிங் மற்றும் லியாங்லிங்ட்சான் | 1725 | கிரேக்கம் |
| ஊசிலி | கிறிஸ்டியன் கீயுஜென்ஸ் | 1656 | நெத்லாந்து |
| கடிகாரம் | பார்த்தோமியு மான்மீப்பி | 1462 | இத்தாலி |
| கண்ணாடி(கறையுள்ளது) | ஆக்ஸ்பர்க் | 1080 | ஜெர்மனி |
| கண்ணாடிபண்டங்கள் | எகிப்து மற்றும் மெஸ்படோமியா | கி.மு 1500 | |
| காகிதம் | சீனர் | 105 | சீனா |
| கார்(நீராவி) | நிக்கோலஸ்குனாட் | 1769 | அமெரிக்கா |
| (பெட்றோல்) | கார்ல்பென்ஸ் | 1769 | பிரான்ஸ் |
| கார்ப்புறேட்டர் | காப்பிலியெப்டெயில்மர் | 1876 | ஜெர்மனி |
| காலஅளவி(குரோனோமீட்டர்) | ஜான்கரிஸன் | 1735 | பிரிட்டன் |
| கால்வனோமீட்டர் | ஆண்ட்ரி மேரிஆம்பியர் | 1834 | பிரான்ஸ் |
| கப்பல்(உறுதியற்றது) | கென்றி கிஃப்பார்டு | 1852 | பிரான்ஸ் |
| கப்பல்(உறுதியானது) | ஜி.எப்.வான்செப்பனின் | 1900 | ஜெர்மனி |
| கிராமபோன்இசைத்தட்டு | தாமஸ் அல்வா எடிசன் | 1878 | அமெரிக்கா |
| குமிழ்திசைகாட்டி | எல்மர் ஏ ஸ்பெர்ரி | 1911 | அமெரிக்கா |
| குழிர்சாதனப்பெட்டி | ஜேம்ஸ்காரிசன் மற்றும் அலெக்சாண்டர் காட்லின் | 1850 | அமெரிக்கா |
| கூட்டல்இயந்திரம் | வில்கெல்ம் ஷிக்காடு | 1623 | ஜெர்மனி |
| சக்கரம் | சுமேரியர்கள் சுமார் | கி.மு 3300 | |
| சலவைஇயந்திரம் | கார்லிமெஷின் கம்பெனி | 1907 | அமெரிக்கா |
| சலவைத் தொழில் | ஜே.எஃப் காணட்ரெல் | 1934 | அமெரிக்கா |
| சறுக்கு அளவுகோல | வில்லியம் ஊத்ரெட் | 1621 | பிரிட்டன் |
| சிப் அடைப்பான் | ந.ட.ஜட்சன் | 1891 | அமெரிக்கா |
| சிமிண்ட்(போட்லாந்து) | ஜோசப் ஆஸ்ப்தின் | 1824 | பிரிட்டன் |
| செல்லுலாய்டு | அலெக்ஸாண்டர்பாக்கிஸ | 1861 | பிரிட்டன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| செல்லோபேன் | ஜெ.ஜே.பிராண்டன்பெர்கர் | 1908 | சுவிஸ்லாந்துடாக்டர் |
| சைக்கில் | கிறிக்பற்றிக்மக்மிலன் | 1839-40 | பிறிட்டன் |
| சைக்கில்டயர்கள் | யான்பாயிடுடன்லப் | 1888 | பிறிட்டன் |
| டிரான்சிஸ்ரர் | பார்டின்ஸாக்லீமற்றும் பிராப்டைன் | 1948 | அமெரிக்கா |
| டீசல்இயந்திரம் | ருடால்ப்டீசல் | 1895 | ஜெர்மனி |
| டெரிலின்செயற்கைஇழை | ஜே.ஆர்.வின்.ஃபில்டு ஜே.டி.டிக்சன் | 1941 | பிறிட்டன் |
| டைனமோ | கைப்போலைட்பிக்ஸை | 1832 | பிரான்ஸ் |
| தட்டச்சுப்பொறி | பெல்லிகிரின்டாரி | 1803 | இத்தாலி |
| தட்டுதடையோட்டி | எ.ஃப்லாஞ்சேஸ்டர் | 1902 | பிறிட்டன் |
| தந்தி | எம்.லாமமோண்ட் | 1787 | பிறான்ஸ் |
| தந்திக்குறியீடு | சாமுவேல்எ.ஃபேப்மோர்ஸ் | 1837 | அமெரிக்கா |
| தானியங்கி | ரிச்சர்ட்திரவித்ரிக் | 1804 | பிறிட்டன் |
| தான்துவக்கி | சார்லஸ்எ.ஃப்கெட்டரிங் | 1911 | அமெரிக்கா |
| திருடர்அபாயஒலிஎழுப்பி | எட்வின்டிகோல்ம்ஸ | 1858 | அமெரிக்கா |
| திரைப்படம் | நிக்கோலஸ்மற்றும் யூன்லூமியர் | 1895 | பிறான்ஸ் |
| தீப்பெட்டி | யான்வாக்கர் | 1828 | பிறிட்டன் |
| தொலைக்காட்சி(எந்திரவியல்) | யான்லாக்கிபெயர்ட் | 1926 | அமெரிக்கா |
| தொலைக்காட்சி | பி.டி.பார்ன்ஸ்வொர்த் | 1927 | அமெரிக்கா |
| தொலைபேசி(ஆரம்பநிலை) | அண்டோணியோமியுசிக் | 1849 | இத்தாலி |
| தொலைபேசி | அலைக்சான்டர்காம்பெல் | 1876 | அமெரிக்கா |
| தையல்இயந்திரம் | பார்த்தலெமிதிம்மோனியர் | 1829 | அமெரிக்கா |
| நியான் விளக்கு | யார்ஜ்கிளாட் | 1910 | பிறான்ஸ் |
| நீராவிபொறி | தாமஸ்சவேரி | 1698 | பிறிட்டன் |
| நீராவிப்பொறி(குளிர்விப்பான்) | ஜேம்ஸ்வாட் | 1765 | பிறிட்டன் |
| நீராவிப்பொறி(பிஸ்ரன்) | தாம்ஸ்நியுகாமன் | 1712 | பிறிட்டன் |
| நீர்கழிதொட்டி | ஜே.கரிங்டன்வடிவமைத்தது | 1589 | பிறிட்டன் |
| நீர்மூழ்கிகப்பல் | டேவிற்புஸ்னல் | 1776 | அமெரிக்கா |
| நீர்தேக்கத்தொட்டி | சர்ஏர்னஸ்ட்ஸ்விங்டன் | 1914 | பிறிட்டன் |
| நுண்கணிப்பி | ராபர்ட்நாய்ஸ்மற்றும் கார்டன்மூர் | 1971 | அமெரிக்கா |
| நுண்காட்டி | இசட்யான்ஸன் | 1590 | நெதர்லாந்து |
| நுண்ணொலிவாங்கி | அலைக்சாண்டர் கிரகம்பெல் | 1876 | அமெரிக்கா |
| நூற்பாலை.ஃபிரேம் | சர்.ரிச்சார்டுஆக்ரைட் | 1769 | பிறிட்டன் |
| நைலான் | வாலஸ்எச்கரோத்தர்ஸ் | 1937 | அமெரிக்காடாக்டர் |
| படச்சுருள் | லூஜிபிரிஸ் | 1885 | பிறான்ஸ் |
| படச்சுருள்(இசையொலி) | லீடி.ஃபாரஸ்ட் | 1923 | அமெரிக்கா |
| படச்சுருள்(பேசும்) | ஜே.இங்கள் ஜே.முசோலி | 1922 | ஜெர்மனி |
| பலூன் | வாக்ட்ஜேக்விஸ் யோசப்மாண்ட்கோல்பியா | 1783 | பிறான்ஸ் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| பல் எனாமல் புச்சு | அந்தோனி ஏ.பிளான்சன் | 1817 | அமெரிக்கா |
| பல் எனாமல் பூச்சு(ரப்பர்) | சார்லஸ் குட்இயர் | 1855 | அமெரிக்கா |
| பறக்கும் குடை | ஏ.ஜே.கார்னெர் | 1797 | பிரான்சு |
| பற்றவைப்பான் | எவான்ஜசலிஸ்டா டாலிசெல்லி | 1644 | இத்தாலி |
| பால் பதனப்படுத்தல் | லூயிஸ் பாஸ்டர் | 1867 | பிரான்ஸ் |
| பீங்கான் | | 815 | சீனா,சிறியஆசியா |
| புகைப்படம்(உலோகத்தின்மேல்) | ஜே.என்.நிப்சி | 1826 | பிரான்சு |
| புகைப்படம்(காகித்தின்மேல்) | டபிள்யூ.எச்.பாக்ஸ்டல் போட | 1835 | பிரிட்டன் |
| புகைப்படம்(படச்சுருளின்மேல்) | ஜான் கார்பட் | 1888 | அமெரிக்கா |
| புன்சென் விளக்கு | ஆர்.வில்ஹெல்ம்வான் புன்சென | 1855 | ஜேர்மனி |
| பேக்லைட் | வியோ எச்.பேக்லாண்ட் | 1907 | பெல்ஜியம் |
| பேனா (நவ) | லூயிஸ் இ.வாட்டர்மென | 1844 | அமெரிக்கா |
| மின்தளஅடுக்கு | அலிஸ்சாண்டடோ வோல்டா | 1800 | இத்தாலி |
| மின்காந்தம் | வில்லியம் டார்ஜின் | 1824 | பிரிட்டன் |
| மின்சார தேய்ப்புப்பெட்டி | எச்.டபிள்யூ சீலி | 1882 | அமெரிக்கா |
| மின்பொறி(நேர்மின்னோட்டம்) | செனோபிகிராம் | 1873 | பெல்ஜியம் |
| மின்பொறி(மாறுமின்னோட்டம்) | நிக்கோலா டெஸ்லா | 1888 | அமெரிக்கா |
| மின்மாற்றி | மெக்கேல் பாரடே | 1831 | பிரிட்டன் |
| மின்போர்வை | வியன்னா கண்காட்சியில் | 1883 | அமெரிக்கா |
| மின்விளக்கு | தாமல் அல்வா எடிசன் | 1897 | அமெரிக்கா |
| மின்னணுக்கணிப்பொறி | டாக்டர்.ஆலன் எம்.டூரிங் | 1824 | பிரிட்டன் |
| மின்னல் கடத்தி (இடிதாங்கி | பெஞ்சமின் பிராங்கிளின் | 1752 | அமெரிக்கா |
| முன்தள்ளி (கப்பல்) | பிரான்ஸிஸ் ஸ்மித் | 1837 | பிரிட்டன் |
| மூக்குக் கண்ணாடி (குவி) | | 1289 | வெனில் |
| மோட்டார் சைக்கிள் | கான்ஸ்டார்நகரின் ஜி.டெயில்மர் | 1885 | ஜெர்மனி |
| ரப்பர்(டயர்கள்) | தாமல் ஹான்காக் | 1846 | பிரிட்டன் |
| ரப்பர் (நீர் கசியாதது) | சார்லஸ் மாசின்டோஸ் | 1823 | பிரிட்டன் |
| ரப்பர் (பதனப்படுத்துதல்) | சார்லஸ் குட் இயர் | 1841 | அமெரிக்கா |
| ரப்பர் (பால்நுரை) | டன்லப் ரப்பர் கம்பனி | 1928 | பிரிட்டன் |
| ரூபிக் கனசதுரம் | பேராசியர் எர்னோ ரூபிக் | 1975 | ஹங்கேரி |
| ரேடார் | ஏ.எச்.டெய்லர் மற்றும் லியோசியங் | 1922 | அமெரிக்கா |
| லி'.ப்ட்இயந்திரம் | எலிஷா ஜி.ஒட்டிஸ் | 1852 | அமெரிக்கா |
| லனோலியம் | பிரெடரிக் வால்டன் | 1860 | பிரிட்டன் |
| லேசர் | டாக்டர் சார்லஸ் எச்.டவுண்ஸ் | 1960 | அமெரிக்கா |
| வனிம விளக்கேற்றி | விலியம் மர்டாக் | 1792 | பிரிட்டன் |
| வானொலித் தந்தி | டாக்டர்.மாஹ்லோன லூமில் | 1864 | அமெரிக்கா |
| வானொலித் தந்தி | ஜி.மார்க்கோணி | 1901 | இத்தாலி |
| விசைத்தறி | இ.கார்ரைட் | 1785 | பிரிட்டன் |
| விண்சறுக்கி | சர்.ஜார்ஜ் காய்லி | 1853 | பிரிட்டன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| விண்மாடங்கள் | டபிள்யூ வி.பாரோனஜென்னி | 1882 | அமெரிக்கா |
| வெப்ப அளவி | கலிலியோ கலிலி | 1593 | இத்தாலி |
| ஜெட் எஞ்சின் | சர்க்பிராங் விட்டில் | 1937 | பிரிட்டன் |
| ஹெலிகாப்டர் | எதியன் ஒஹ்மிச்சென் | 1924 | பிரான்சு |
| இரத்தஓட்டம் | வில்லியம்ஹார்வே | 1628 | பிரிட்டன் |
| உயிர் வேதியியல் | ஜான் பாட்டிஸ்டாவான் ஹெல்மோன்ட் | | பெல்ஜியம் |
| நுண்ணுயிரிகள் பாக்டீரியா | லியுவென்ஹாக் | 1683 | ஹாலந்து |
| நரம்பியல் | பிரான்ஸ் ஜோசப்கால் | 1758 | ஜெர்மனி |
| உடலியங்கு இயல் | ஆல்பிரெச்சட் வான்ஹால்லர் | 1757-66 | சுவிட்சர்லாந்து |
| அம்மைப்பால் தடுப்பு | எட்வர்டு ஜென்னர் | 1596 | பிரிட்டன் |
| திசுவியல் | மேரி பிச்சாட் | 1771 | பிரான்சு |
| ஸ்டெதஸ்கோப் | ரீனிலாயென்னக் | 1819 | பிரான்சு |
| உட்கருவியல் | கார்ல் ஏர்னஸ்வான் பேயர் | 1792 1896 | எஸ்தோனியா (சோவியத்ரஷ்யா) |
| மார்பின் | பிரெடரிக் செர்ட்டர்னர் | 1805 | ஜெர்மனி |
| குளோரோபாம்(மயக்கமருந்து) | ஜேம்ஸ் சிம்ஸன் | 1847 | பிரிட்டன் |
| ராபிஸ் தருப்பு | லுயிஸ் பாஸடர் | 1860 | பிரான்சு |
| நுண்கிருமி இயல் | பெர்டினன்ட் கான் | 1872 | ஜேர்மனி |
| தொழுநோய் நச்சுயிர் | ஹான்சன் | 1873 | ஜேர்மனி |
| காலரா, காசநோய் நச்சுயிரிகள் | ராபர்ட் காச் | 1877 | ஜேர்மனி |
| மலேரியா நச்சுயிரிகள் | லாவெரான் | 1880 | பிரான்சு |
| தொண்டை அடைப்பான் நச்சுயிரிகள் | கிளெப்ஸ் லோ.ஃப்லர் | 1883 | ஜேர்மனி |
| ஆஸ்பிரின் | டிரெசர் | 1889 | ஜேர்மனி |
| நோய்நுண்டி நச்சாய்வு இயல் (வைரஸ்) | இவானோவஸ்கி பாஜெர்னிக | 1992 | சோவியத்ரஷ்யா ஹாலந்து |
| உளவியல் பகுப்பாய்வு | சிக்மண்ட்பிராய்டு | 1895 | ஆஸ்திரியா |
| இரத்த நிணநீரியல் | பால்ஏரிலிச் | 1884-1915 | ஜேர்மனி |
| எதிர்ப்பு மருந்துகள் (நோயெதிர்ப்பு இயல்) | பேரிங் மற்றும் கிதாசாட்டோ | 1890 | ஜேர்மனி |
| அட்ரீனலின் | ஷா.ஃபரும் ஆலிவரும் | 1894 | பிரிட்டன் |
| நாளமில்லாச் சுரப்பி | பேஸ்லிஸ், ஸ்டார்லிங் | 1902 | பிரிட்டன் |
| மின் இதயத்துடிப்பு இயல் | எய்ந்தோவன் | 1906 | ஹாலந்து |
| விஷச்சுரம் தடுப்பு மருந்து | ஜெ.நி.கோலி | 1909 | பிரான்சு |
| பாலுணர்வுசுச் சுரப்பி நீர் | இயூகென் ஸ்டீனாக் | 1910 | ஆஸ்திரியா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| வைட்டமின்கள் | சர்எ.ஃப்ஜே.ஹாப்கின்ஸ் | 1912 | பிரிட்டன் |
| (ஊட்டச்சத்துக்கள்) | | | |
| விட்டமின் சி | ஃபிரோலிக் ஹோல்ஸ்ட | 1912 | நோர்வே |
| விட்டமின் பி | மக்கொல்லம் | 1916 | அமெரிக்கா |
| செயற்கை விஷமுறிவுகள் | லாண்டஸ்டீனர் | 1917 | அமெரிக்கா |
| தைராக்சின் | எட்வர்டு கால்வின்கொண்டால் | 1919 | அமெரிக்கா |
| நீரிழிவிற்கு இன்சுலின் | பாண்டிங் மற்றும் பெஸ்ட் | 1922 | கனடா |
| விட்டமின் டி | மக்கொல்லம் | 1922 | அமெரிக்கா |
| விட்டமின் பி | மினோட் மற்றும் மர்ஃபி | 1928 | பிரிட்டன் |
| பென்சிலின் | அலெக்சாண்டர் பிளமிங் | 1928 | பிரிட்டன் |
| கார்டிசோன் | எட்வர்ட் கால்வின்கெண்டால் | 1936 | அமெரிக்கா |
| டைக்குளோரோடை.ஃபனைல் | பால்முல்லர் | 1939 | ஜேர்மனி |
| புரைகுளோரோ ஈத்தேன | கார்லாண்ட்ஸ்டின் | 1940 | அமெரிக்கா |
| இரத்த ஆர்.எச்.காரணி | | | |
| விசர்ஜிக் அசிட்டை ஈத்தல் | ஹா.ஃப்மான் | 1943 | சுவிட்சர்லாந்து |
| ஆமைடு என்னும் | செலமன் வாசித்மன் | 1944 | அமெரிக்கா |
| எல்.எஸ்.டி | | | |
| சிறுநீரக எந்திரம் | கால்.ஃப் | 1947 | ஹாலந்து |
| குளோரோமைசிட்டின் | பார்ஹோல்டர் | 1948 | அமெரிக்கா |
| ஆரியோமைசின் | டக்கர் | 1949 | அமெரிக்கா |
| ரிசெர்ப்பைன் | ஜல்வக்கில் | 1949 | இந்தியா |
| டெர்ராமைசின் | ஃபின்லேயும் ஏனையோரும் | 1950 | அமெரிக்கா |
| குளிர் அறுத்துவம் | ஹென்றி ஸ்வான் | 1953 | அமெரிக்கா |
| இதயம் வகிர் அறுத்துவம் | வால்டன் வில்லேஹல் | 1953 | அமெரிக்கா |
| இளம்பிள்ளைவாதத்தடுப்புஊசி | ஜோன்சாக் | 1954 | அமெரிக்கா |
| இளம்பிள்ளைவாதத் தடுப்பு | ஆல்பர்ட் சாபின் | 1954 | அமெரிக்கா |
| மருந்து வாய்வழி | | | |
| கருத்தடை மாத்திரைகள் | பின்கஸ் | 1955 | அமெரிக்கா |
| அறுவைச் சிகிச்சையின் | | | |
| போது செயற்கை இதயம் | | | |
| பயன்படுத்தல் | மைக்கல்டி பார்க்கி | 1963 | அமெரிக்கா |
| இதயமாற்று அறுவை சிகிச்சை | கிறிஸ்டியன் பர்னார்டு | 1967 | தென்அமெரிக்கா |
| முதல் சோதனைக்குழாய் | ஸ்டேப்டோ மற்றும் | 1978 | பிரிட்டன் |
| குழந்தை | எட்வர்ட்ஸ் | | |
| மனிதரில் ஜீன் மருத்துவம் | மார்டின் கிளைவ் | 1980 | அமெரிக்கா |
| சின்னம்மை நோய் ஒழிப்பு | உலகசுகாதாரநிறுவனஅறிவிப்பு | 1980 | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கீதாசாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது
எது நடக்கின்றதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்.
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய் அதை நீ இழப்பதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது
மற்றொரு நாள், அது வேறொருவருடையதாகும்.
" இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமாகும்"

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலை வாணி அச்சுக்கலையகம். கடை வீதி. மல்லாவி.